# உலகத் தமிழ் அமைப்பு

**World Thamil Organization, Inc.**

(A Non-Profit Organization registered in USA, Established 1991 )

**(www.worldthamil.org * E-mail: wtogroup@gmail.com)**


மார்ச்சு 18, 2013


**தலைவர்**

**திரு. செல்வன் பச்சமுத்து**

வட கரொலினா

**துணைத் தலைவர்**

**முனைவர் வி.சி. தேவ்**

டென்னசி

**செயலாளர்**

**திரு. அரங்கநாதன் கன்னியப்பன்**

நியூ செர்சி

**இணைச் செயலாளர்**

**திரு. பாக்கியராசன் சேதுராமலிங்கம்**

மிச்சிகன்

**பொருளாளர்**

**முனைவர் தணி குமார் சேரன்**

வட கரொலினா

**இயக்குநர்கள்**

**திரு. நாஞ்சில் பீற்றர்**

மேரிலாந்து

**திருமதி. புட்பராணி வில்லியம்சு**

மேரிலாந்து

**திரு. ஆறுமுகம் பேச்சிமுத்து**

கலிபோர்னியா

**திரு. கார்த்திகேயன் தெய்வீகராசன்**

கனெக்டிகட்


**தமிழக மாணவர்களை ஆதரித்து அமெரிக்காவில் போராட்டம் - உலகத் தமிழ் அமைப்பு:**

தமிழக மாணவர்களை ஆதரித்து மார்ச்சு 19 ஆம் நாள் காலை 9:00 மணியளவில் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் முன் சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதித் தமிழர்கள் போராட்டம் நடத்தினர். போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் தமிழர்கள் பலர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டு முழக்கம் செய்தனர். ஒரு சில நாட்களில் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டு ஏராளமான தமிழர்கள், அதுவும் வேலை நாளில் வந்து, போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

“தமிழ் நாட்டு மாணவர் போராட்டத்தை ஆதரிக்கிறோம்"

"இந்தியாவே ! மனித உரிமையை ஆதரி, தமிழர்களைக் காப்பாற்று"

"இந்தியாவே ! அமெரிக்கத் தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்யாதே"

எனப் பலவாறு முழக்கமிட்டனர்.

“We support TN Students”, “INDIA - Support Human Rights”, “INDIA - Save the Tamils”, “INDIA - Don't Dilute US Resolutions” போன்ற முழக்கங்கள் தூதரக அதிகாரிகளின் காதில்விழும் அளவிற்கு உரத்த குரலில் முழக்கமிட்டனர்.

இறுதியாக துணைத் தூதர் ஒருவரைச் சந்தித்து உலகத் தமிழ் அமைப்பின் சார்பில் (www.worldthamil.org) கடிதமொன்றை அளித்தார்கள். அவரும் அக்கடிதத்தை இந்தியாவிற்கும் மற்ற தூதரகங்களுக்கும் அனுப்பிவைப்பதாக உறுதியளித்தார். மேலும் அதே கடித்தத்தை நியூ யார்க் நகரில் உள்ள தூதரகத்திற்கும் தொலைப்படி மூலம் அனுப்பிவைத்தனர்.

அமெரிக்க காவல்துறையினரின் ஒத்துழைப்புடனும், பாதுகாப்புடனும் இந்தப் போராட்டம் சிறப்பாக நடந்து முடிந்தது.அடுத்தடுத்தப் போராட்டங்கள் இதைவிட மிகவும் வலிமையாக நடத்தமுடியும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

"தமிழக மாணவர்கள் வெல்வார்கள் ! அவர்களுக்கு எங்கள் வாழ்த்துகள் !! உறுதியாக வெல்வோம், நாளை தமிழீழம் காண்போம் !!! "

என்று உறுதியாக நம்பிக்கை தெரிவித்தனர்.